செ.வெ.எண்: 367 நாள்: 17.06.2019

**விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லினை அருகில் உள்ள நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லினை அருகில் உள்ள நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் காரீப் கொள்முதல் பருவம் 2018-19 முன்னிட்டு நெல் அறுவடை தொடங்கியுள்ளதால், விவசாயிகள் அதிகபட்ச அளவில் பயனுறும் வகையிலும், விலை வீழ்ச்சியின் பாதிப்பிலிருந்து காக்கும் வகையிலும், விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய ஏதுவாக ஏற்கனவே 15 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்தரவின்பேரில் திறக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது கறம்பக்குடி தாலுகாவில் உள்ள காட்டாத்தி, மணமேடை கிராமங்கள் மற்றும் கந்தர்வகோட்டை தாலுகாவில் உள்ள வெள்ளாளவிடுதி கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் நெல்லினை தங்கள் கிராமங்களுக்கு அருகில் உள்ள நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**